நல்லூர் இளைஞர் நூலகம்
[illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as aNewspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 01 சனிக்கிழமை (17-10-1992) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 324

# பிரிட்டனின் இராணுவ உதவி மீண்டும் ஸ்ரீலங்கா அரசுக்கு!

## உறவுகள் முன்னரை போல் சீராகும்

கொழும்பு, அக்டோபர் 17

பிரிட்டன் மீண்டும் ஸ்ரீலங்கா அரசுக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கவுள்ளது.

இதற்கான முடிவை தமது அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக கொழும்பு வந்திருக்கும் பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் பொய்ட் அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவுடனான ராஜதந்திர உறவுகளை வழமை நிலைமைக்குக் கொண்டுவந்து இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு உறவுகளை முன்னரைப் போலச் சீராக்கவும் தமது அரசு முடிவு செய்திருப்பதாக அவர் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காவில் பிரிட்டிஷ் தூதுவராகப் பணி புரிந்த டேவிட் கிளாட்ஸ்ரோன் கொழும்பு அரசினால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சுமார் ஒன்றரை வருடங்களாக, ஸ்ரீலங்காவுக்கு வழங்கும் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை பிரிட்டன் நிறுத்தி வைத்தது.

பல மாதங்களாக தூதுவர் எவருமின்றியே கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் இயங்கி வந்தது. அண்மையில் தான் தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

பிரிட்டிஷ் துணை அமைச்சர் தமது அரசாங்கத்தின் புதிய நிலைப்பாடு குறித்துச் சொன்னதாவது:-

எனது அரசு ஸ்ரீலங்காவுக்கு பொருளாதார உதவிகளை வழங்குவது என்று தீர்மானித்துள்ளது

ஆனால் அடுத்த ஆண்டுக்கான உதவிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பிரிட்டன் மேற்கொள்ள முடியாதுள்ளது.

அதன் பின்னர் ஸ்ரீலங்காவுக்கான பொருளாதார உத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவைச் சம்பவம்:
## விசாரணை நடத்த தனிநபர் ஆணைக்குழு

பொலன்னறுவை பகுதியில் கடந்த வியாழன் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தனிநபர் விசாரணைக் குழு ஒன்றை பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது.

ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி எச். ஏ. சில்வா தனிநபர் ஆணையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை, காயமடைந்தோரின் எண்ணிக்கை, தாக்குதலுக்குள்ளான கிராமங்களுக்கான பாதுகாப்பு ஆகியவை குறித்து இந்த விசாரணைக் குழு விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பள்ளிவாசல்கள் அருகே துருப்புக்கள் குவிப்பு!

பொலனறுவைப் பகுதியில் நான்கு கிராமங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து கொழும்பிலும், மற்றும் மாகாண நகரங்களிலும் உள்ள பள்ளிவாசல்களில் நேற்று வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் தொழுகைக்காகக் கூடியபோது ஆயுதம் தாங்கிய துருப்புக்கள் அங்கு பலத்த காவல் புரிந்தன.

கிழக்கில் முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்து வாழும் பகுதிகளிலும் பெருமளவில் துருப்புக்கள் நடமாட்டம் காணப்பட்டன.

பள்ளிவாசல்களுக்கு வெளியே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கவும் —

தமிழ் - முஸ்லிம் பகுதிகளில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதைத் தடுக்கவுமே இராணுவத்தினர் அப்பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது. (உ-5)

## அரசுக்கு வழங்கும் ஆதரவை முஸ். காங்கிரஸ் நிறுத்தும்

கொழும்பு, அக். 17

முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் தவறிய காரணத்துக்காக ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள நான்கு கிராமங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தப் பயமுறுத்தலை விடுத்திருக்கிறது

இராணுவத்தில் முஸ்லிம்களுக்கு என தனிப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தமது முந்தைய கோரிக்கையை அந்த அறிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்தி உள்ளது (உ-எ)

## சூனியப் பிரதேசங்களாக திருமலை தமிழ்க்கிராமங்கள்

யாழ்ப்பாணம், அக். 17

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இறக்கக்கண்டி, புடவைக்கட்டு, கள்ளம்பச்சை, குச்சவெளி போன்ற இடங்கள் மக்கள் நடமாட்டமற்ற சூனியப் பிரதேசங்களாக உள்ளன தென் தமிழீழத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் இத்தகவலைத் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 80 சதவீதமான பிரதேசங்கள் வெறுமையாகவே காணப்படுகின்றன. சில இடங்களில் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் மக்கள் தங்கியுள்ளனர்.

நிலாவெளி, திரியாய், சாம்பல்தீவு, மூதூர் பகுதிகளிலும் குறைந்த எண்ணிக்கையான மக்களே வாழ்கின்றனர்.

திருகோணமலையில் தற்சமயம் தீவிர சிங்களக் குடியேற்றம் இடம்பெறும் பகுதியாக அல்லை சந்தனாய் வீதி காணப்படுகிறது. அ[illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கில் ஹெலி நோட்டம்

அளவெட்டி, அக். 17

வலி. வடக்கில் அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், கன்னாகம், ஏழாலை போன்ற பகுதிகளை கடந்த இரு தினங்களாக ஹெலிகள் நோட்டமிட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை அம்பனை, தெல்லிப்பழைப் பகுதிகளில் அடிக்கடி வேட்டுக்களும் தீர்க்கப்படுகின்றன. (ஒ-13)

## மூளாய் நோக்கி ஷெல் தாக்குதல்

சுழிபுரம், அக். 17

காரைநகர் படையினர் நேற்றுக் காலை 10 மணியளவில் மூளாய் - வட்டுக்கோட்டை பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

ஷெல் குண்டு ஒன்று மூளாய் - வட்டுக்கோட்டை வயல் வெளியில் விழுந்து வெடித்தது

இதேசமயம் மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் பகல் ஒரு மணியளவில் சுழிபுரம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர். (ஒ-28)

## தமிழக அமைச்சர்கள் 7 பேர் ராஜினாமா செய்ய முடிவு

### இப்படிக் கூறுகிறார் சுவாமி

சென்னை, அக். 17

முதலமைச்சர் ஜெயலலிதா மீது அதிருப்தி கொண்டுள்ள ஏழு மாநில அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்யத் தயாராக உள்ளனர் என்றும்—

அந்த அமைச்சர்களே இதனைத் தம்மிடம் தெரிவித்தனர் என்றும் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பதவி விலகும் ஏழு அமைச்சர்களும் தம்முடன் சேர்ந்து கொள்ள முன்வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் இந்தக் கூற்றை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் கட்டுரைப் போட்டி: பரீட்சை நாளை காலையில்

உதயன் வெளியீட்டகத்தினர் யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டியின் ஒரு பிரிவாக யாழ். கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இப்போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 க்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இவர்களுக்குரிய பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் கல்விக் கோட்டங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [அ-10]

## ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் சீனி விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் அக். 17

குடாநாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து தமது கையிருப்பில் இருந்து 10 மெற்றிக் தொன் சீனியை ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்க யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு தீர்மானித்துள்ளது

எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் சீனி அதிகளவில் எடுத்து வரப்பட இருப்பதால் 'குமாரி' கப்பலில் வந்த சீனியில் ஒரு பகுதியை உடன் விநியோகிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 'குமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்டிருந்த சர்க்கரையும் ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஓ-5)

காடுகள் படைப்போம்
கருமுகில் காண்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைவாதியான பெண்ணுக்கு நோபல் பரிசு!

ஒஸ்லோ, அக். 17

கௌதமாலா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைவாதியான — 33 வயது நிரம்பிய— றெகோபஸா மென்ஷு என்ற பெண்ணுக்கு 1992க்கான நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசுக் கழகம் இதனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

திருமதி மென்ஷு தென் அமெரிக்காவின் பழங்குடி இந்திய இனத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

பாதுகாப்புப் படையினரால் 1981 இல் இவரது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அநாதையான இவர் சொந்த நாட்டைவிட்டு வெளியேறி மெக்ஸிக்கோவில் தற்போது வாழ்ந்து வருகின்றார்.

பழங்குடி இன மக்களின் மனித உரிமையைத் தழுவிய சமூக நீதி மற்றும் இன, கலாசார ஒன்றுமைக்காக திருமதி மென்ஷு பாடுபட்டு வருகின்றார் என்பதற்காக அவர் நோபல் சமாதானப் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று நோபல் பரிசுக் கழகம் அறிவித்துள்ளது.

# ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ஆயிரம் பேருக்கு நியமனம்

கொழும்பு, அக். 17

அடுத்த மாத முற்பகுதியில் ஆயிரம் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவிருப்பதாக கல்விச் சேவைகள் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்றும்—

பிரதேச உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் தெரிவு இடம்பெறும் என்றும்— அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக் 17

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நான்கு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெற இருக்கின்றன.

**17 வயதுப் பிரிவு**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும்—

சென். சார்ள்ஸ் அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்து அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணி மோதும்.

**19 வயதுப் பிரிவு**

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா மைதானத்தில் 19 வயதுப் பிரிவினரிடையே நடைபெறும் ஆட்டத்தில் வரணி ம. வி. அணியை எதிர்த்து ஹாட்லி அணி மோதும். (உ)



(5396)


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 06 — 1905



மறைவு: 26 — 10 — 1991

அமரர் கனகரத்தினம் காசிப்பிள்ளை அவர்கள்

(புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சிப்பதி கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா)

திதி: 17 — 10 — 1992

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

40, நல்லை ரோட், யாழ்ப்பாணம்.

(22929)


# இன்று

யாழ்ப்பாணம், அக். 17

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய சாரணரும் சாள்ஸ் மகா வித்தியாலய சாரணரும் இணைந்து நடத்தும் யாழ். பொறி முன்னோடிப் பயிற்சிப் பாசறை இன்றும் நாளையும் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஓ)

# சுவடுகள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், அக். 17

இளவாலை எழுதிய ''சுவடுகள்'' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ. பரதன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். முதற்பிரதியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் பெற்றுக்கொள்வார்.

திரு. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் செம்பியன் செல்வன், சாந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். தொடர்ந்து ''எம் வழிச் சுவடுகள்'' எனும் கவி அனுபவ வெளிப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெறும். (அ)

# இன்று வருகிறது 'வெளிச்சம்'

யாழ்ப்பாணம், அக். 17

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வெளியிடும் 'வெளிச்சம்' புரட்டாதி, ஐப்பசி (1992) இதழ் இன்று வெளிவருகிறது.

முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழான இந்த இதழ், சிறுகதைச் சிறப்பிதழாக வெளிவருகிறது. (ஓ)

# திருமலை பத்திரகாளி கௌரிக்காப்பு

யாழ்ப்பாணம், அக். 17

கேதார கௌரி விரதத்தை ஒட்டி திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி கேதார கௌரி காப்பு விநியோகிக்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கேதார கௌரி விரதம் இருக்கும் அடியார்களின் வசதி கருதி, திருமலை காளி கோயில் கேதார கௌரி காப்பு கல்வியங்காட்டில் வழங்கப்படவிருக்கிறது.

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் உள்ள அருள்மிகு இலங்கைநாயகி ஆலயத்தில் வைத்து காப்பு விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், அக். 17

அச்சுவேலியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த எஸ். பத்மாவதி (வயது 68) என்பவரே மரணமானவராவார்.

இவ்விபத்தில் மொத்தம் ஏழு பேர் காயமுற்றது தெரிந்ததே. (அ-15)

# விவசாயச் செய்கை

வடமராட்சி, அக். 17

கடந்த வாரம் பெய்து வந்த மழையைப் பயன்படுத்து வல்லைப் பகுதியில் விவசாயிகள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-165)


சுன்னாகம் ஐயனார் ஆலய வழிபடுவோர் சங்க

# விசேட பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் (01-11-92) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து வழிபடுவோர் யாவரையும் சமுகம் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சி. ஐ. கந்தசாமி
ஆதீனகர்த்தா

சுன்னாகம்.
16-10-92

(இ/5404)



# உடனடித் தேவை

ஜாம் பாவனையாளர்களிடம் தாழ்மையான வேண்டுதல்.

தங்களிடம் உள்ள வெற்று ஜாம் போத்தல்களை கூடிய விலையில் நாங்கள் கொள்வனவு செய்ய உள்ளோம்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

V. S. S. B.

(22931) 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



யாழ். நல்லூர்

இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின்
(மங்கையர்க்கரசி)

நிதி உதவிக்காக

இக்கல்லூரி பழைய மாணவர்களால் நடத்தப்படும்

# ★ கலை விழா ★

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்

காலம்: 17-10-1992 சனி மாலை 5 மணி

பிரதம விருந்தினர்: யாழ். மாநகரசபை ஆணையாளர், திரு. வே. பொ. பாலசிங்கம்.

சிறப்பு விருந்தினர்: நல்லூர் உ. வி. அதிபர், திரு. ஆ. மகாலிங்கம்.

"இசை மாலை"

திரு. பொன். சுந்தரலிங்கம்.
செல்வி கு. நாகராஜ ஐயர்,

இலங்கை வேந்தனின்:

"கதகளி பரதநாட்டியம்"

புலவர் முத்துஇராஜரெத்தினத்தின்

இலங்கை வேந்தன், எல்லாளன், சந்தரோமை, இளவரசி, குளக்கோட்டன், ஜயவீரசிங்கையாரியன் (யாழ்ப்பாண மன்னன்), ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன், சங்கிலியன், கண்டியரசன் முதலிய ஈழத்து வரலாற்று நாடக வரிசையில்

"பண்டார வன்னியன்"



(பண்டார வன்னியனாக இலங்கை வேந்தனின் தோற்றம்)

தலைவர்: திருமதி ச. கார்த்திகேசன்,

காரியதரிசிகள்: திருமதி அ. தம்பையா, திரு கு. சிவகுமார்.

டிக்கெட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பளிப்பு: வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பரிசீக்க உகந்தது:

"ஜீவாகாரம்"

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

(22922)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# புலிகளைத் தேடுவதாகக் கூறி மலையகத்தில் கொள்ளை

கொழும்பு, அக். 17

படையினர் போல் வேடம் தரித்து விடுதலைப் புலிகளைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு மலையகப் பகுதி வீடுகளில் கொள்ளையிட்டு வந்த கோஷ்டி ஒன்றை பண்டாரவளைப் பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கும்பவெல என்னுமிடத்தில் கைதான இந்த நபர்களிடம் இருந்து சுழல் துப்பாக்கிகள், இராணுவ உடைகள், போலி இராணுவ அடையாள அட்டைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெரிவுக்குழுவின் யோசனை; கூட்டணிக்கு ஆச்சரியம்

கொழும்பு, அக். 17

இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வாக இப்போது தமிழ்க் கட்சிகள் முன் வைக்கப்பட்டுள்ள யோசனை எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கூறினார்.

நடப்பவைகளைப் பார்த்தால் எல்லாம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

ஒரு பிராந்திய சபையின் கீழ் வடக்கு - கிழக்குக்கு இரண்டு மாகாண சபைகள் அமைக்கும் யோசனையொன்றை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க வெளியிட்டிருக்கிறார்.

அந்த யோசனையே தற்போது தமிழ்க் கட்சிகள் முன் வைக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# இடத்துக்கு ஏற்ற விதத்தில் இராணுவ நடவடிக்கைகள்

## சரத் முனசிங்கா தகவல்

கொழும்பு, அக். 17

வடக்கு - கிழக்கில் யுத்தத்தை வழி நடத்தும் படைத் தளபதிகளினால் அந்த அந்த பிரதேசத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற வகையில் இராணுவ நடவடிக்கைகள் திட்டமிடப்படும் என்றும்—

அவை முப்படைகளின் தளபதிகள் பொலீஸ் மா அதிபர் ஆகியோரின் ஆலோசனை பெறப்பட்ட பின்னரே செயல்படுத்தப்படவேண்டும் என்றும் கூட்டுப்படைகள் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தீர்மானித்துள்ளார்.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்ஹா இத்தகவலை செய்தியாளரிடம் வெளியிட்டார். [இ-எ]

# வருமானவரி செலுத்தாத 2,841 பேர் மீது வழக்கு!

வருமானவரி செலுத்தாத 2 ஆயிரத்து 841 பேர் மீது வருமான வரித் திணைக்களம் வழக்குத் தொடர உள்ளது. இவர்களில் 13 பேருக்கு நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-10]

# வட-கிழக்கில் 2,900 பேருக்கு இதுவரை ஆசிரியர் நியமனம்

கொழும்பு, அக். 17

வடக்கு - கிழக்கில் இவ்வாண்டில் 2 ஆயிரத்து 900 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக கல்விச் சேவைகள் ஆணையாளர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்திருக்கிறார்.

இவர்களில் 800 பேர் மட்டுமே சிங்கள மொழி மூலமான ஆசிரியர் என்றும் ஏனையோர் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் என்றும் அவர் கூறினார்.

வடபகுதியில் மட்டும் இந்த ஆண்டு ஆயிரத்து 200பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கில் ஆயிரத்து 700 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# மக்கள் எழுச்சி மூலமே அரசை பதவி விலக்க முடியும்

## வாசுதேவ நாணயக்கார பேட்டி

கொழும்பு, அக். 17

"நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதன் மூலமோ அல்லது நாட்டின் சட்டவிதிகளுக்கு உட்பட்ட வகையிலோ இப்போதுள்ள அரசை பதவி விலகச் செய்ய இயலாது. மக்கள் எழுச்சி மூலமே அரசை பதவி விலகச் செய்ய முடியும்"

இவ்வாறு கூறினார் நவசம சமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார.

வெரித்தாஸ் சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"மக்கள் எழுச்சி மூலம் மட்டுமே அரசை பதவி விலகச் செய்ய முடியும் என்பதாலேயே எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்த பாதயாத்திரை, ஆர்ப்பாட்டங்கள், கோஷம் எழுப்புதல் போன்ற நடவடிக்கைகளில் எமது கட்சி எவ்வித நிபந்தனையுமின்றிக் கலந்து கொண்டது.

ஜனாதிபதித் தேர்தல் நடக்குமிடத்து, பிரேமதாஸவைத் தோற்கடிப்பதற்காக எதிர்க்கட்சிகள் ஒரு அபேட்சகரை நிறுத்தினால், அந்த அபேட்சகர் எமது கட்சிக்கும் ஏற்புடையவராக இருந்தால், நாம் அவரை ஆதரிப்போம்" — என்றும் நாணயக்கார கூறியுள்ளார். [இ-10]

# அராலிப் பகுதியில் மீனவர் தொழில் இன்றிப் பாதிப்பு

## படையினர் தினமும் துப்பாக்கி வேட்டு

அராலி, அக். 17

அராலி மேற்குக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் தொழில் இன்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

காரைநகரில் நிலை கொண்டுள்ள படையினர் கடந்த சில தினங்களாக அராலி கடல் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதே இதற்குக் காரணம் ஆகும்.

இதனால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்து வந்து அராலிப் பகுதியில் தங்கி இருப்போர் ஆவர்.

இரவு நேரங்களில் 7-00 மணிக்கும் 9-00 மணிக்கும் இடையில் படையினர் தினமும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-12]

# மகளிர் கருத்தரங்கு

நல்லூர் யாழ். பிராந்திய கூட்டுறவுச் சமித மகளிர் குழுக்களுக்கான கருத்தரங்கு இன்று சனி காலை 9-30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறும். [இ-162]

# கவிதை நூல் வெளியீட்டு விழா

நாவண்ணனின் "கதை-கண்ணீர் - கவிதை" என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு, நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில், கவிஞர் சோ. பத்மநாதன், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, அருட்கலாநிதி சாம ம. செல்வரெட்ணம் அ.ம.தி ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவர். [ஒ]

# மன்னிப்புச் சபை உறுப்பினர் இருவர் 21இல் வருவர்

சர்வதேச மன்னிப்புச் சபையின் இரண்டு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று இம்மாதம் 21 ஆம் திகதி கொழும்பு வரும் என்று அறிவிக்கப்படுகிறது.

மன்னிப்புச் சபையின் ஆசிய பிரிவைச் சேர்ந்த இம்தியாஸ் சைஜ், இலங்கையில் மனித உரிமை நிலைவரம் பற்றி ஆய்வு நடத்தும் எலிஸபெத் நிஸான் ஆகியோரே இந்த இரு உறுப்பினர்களும் ஆவர்.

இதனிடையில் - பலாத்காரமாக கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல் நடத்துவதில் அரசு காட்டும் தாமதம் பற்றி மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. [இ-எ]

# கால்நடைகளை கட்டி வைக்குமாறு அறிவுறுத்து!

காலபோகத்துக்கான நெற்செய்கை ஆரம்பமாகிவிட்டதால் கட்டாக்காலி ஆடு, மாடுகளை கட்டி வளர்க்குமாறு கால்நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டவிழ்த்து விடப்படும் கால்நடைகளின் சொந்தக்காரர் மீது குற்றப்பணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில், சங்குவேலி, மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் உள்ள கிராமசேவையாளரின் கீழ் ... மூலம் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-162]

# காலபோக விவசாயத்துக்கு தேவையான உரவகைகள்

## தொல்புரத்தில் போதியளவு உண்டாம்

அராலி, அக். 17

தொல்புரம் கமநல சேவை நிலைய உரக்களஞ்சியத்தில் காலபோக விவசாயத்துக்குத் தேவையான சகல உரவகைகளும் உண்டு. விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அவற்றை கொள்வனவு செய்து பயன்படுத்தலாம்;

இவ்வாறு தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. இ. இராசேந்திரம் அறிவிக்கின்றார். [இ-12]

# காணாமற் போனோர் பற்றி விசாரிக்க ஆணைக்குழு

## வழக்கறிஞர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, அக். 17

1983 ஆம் ஆண்டில் இருந்து காணாமற் போனவர்கள் பற்றி விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற விஷயம், இலங்கை வந்துள்ள ஐ. நா மனித உரிமை வேலைத் திட்டக் குழு உறுப்பினர்களுக்கும் ஸ்ரீலங்கா வழக்கறிஞர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த பேச்சுகளின் போது வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள காணாமற் போன ஆட்கள் பற்றிய பதிவேடுகளைப் பரிசோதனை செய்வதற்கு சட்டத்தரணிகள் சங்கம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளை அனுமதிக்க வேண்டும் என்ற ஐ நா. மனித உரிமைக் குழுவின் சிபார்சு இன்னமும் அமுல் நடத்தப்படாதிருப்பது பற்றியும் அப்பேச்சுகளின் போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது விஷயத்தை ஐ நா. மனித உரிமைக் குழுவினர் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்திக்கும் போது அவர்களுடன் விவாதிப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

# 10 லட்சம் கொள்ளை; ஐவர் கைது

கொழும்பு, அக். 17

கொள்ளுப்பிட்டி லிபேர்ட்டி பிளாஸாவில் உள்ள கடை ஒன்றில் கடந்த செவ்வாயன்று பத்து லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக பிசர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர் — என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [த-எ]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 09 | 28 |
| — | — |
| 04 | 10 |
| — | — |
| 1922 | 1991 |

திருமதி

## கண்ணையா மனோன்மணி

திதி: 17 — 10 — 1992

அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
உயர்த்திய அன்புத் தெய்வமே அம்மா!
எந்நாளும் எங்கள் இடர் நீக்கி,
இன்னல் போக்கி
வாழ்வில் ஒளியூட்ட வேண்டி
இந்நாளில் பிரார்த்தித்து
தங்கள் ஆத்மா முருகன்
கழல் சேர இறைஞ்சுகிறோம்;

- குடும்பத்தினர்.

2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு;

வசந்தகுமார் வீதி,
பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்;

[இ-3704]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஓவ்செட் படத்துடன் கலண்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா புத்தகசாலை, இல. 330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (22882)

Bridal Saree, அமெரிக்கன் ஜோஜெற், மணமக்கள் கம்பளம் தேக்கு சுந்தோர் மேசை, குக்கர், சிலிண்டர், பழைய பிறேமுடன் கண்ணாடிகள், தோட்ட மண்வெட்டி, எவர்சில்வர் உபகாரப் பொருள்கள், மேசை மின் விசிறிகள், பீங்கான்/கிளாஸ் வகைகள், எலாம் மணிக்கூடு, அன்ரெனா, வானொலிப் பெட்டிகள். இல. 7, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி. (22910)

## மயூரதி வெளியீடு

கடந்த 4 வருட O/L வினாத்தாள்களும் - விடைகளும் ரூபா 55-00. மேலதிக வினாத்தாள்களும் ரூபா 125-00. பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, மக்மிலன், ஸ்ரீகாந் தனலக்ஷ்மி, சுன்னாகம் மற்றும் புத்தகசாலைகளில் கிடைக்கும். (4984)

## நல்லினத் தோடை

விவசாயத்தில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங் கன்றுகள், மற்றும் பதிவைத்த பாங்கொக் கொய்யா நாற்றுக்கள், எலுமிச்சை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. முந்துவோருக்கு பூக்கள், காய்கள் அடங்கிய நாற்றுக்கள் வழங்கப்படும். இடம்: துரைஐயா, நிலாவரையடி, நவக்கிரி, புத்தூர். (5000)

## செயல்நூல் ஆண்டு 3-11

துரித மீட்டற் பயிற்சி பெறப் பெருந்துணை புரியும் தமிழ்மொழி செயல் நூல்கள், ஆசிரியர்கள்; மீட்டற் பயிற்சி வினாக்கள் ஆக்கும் சிரமத்தைக் குறைக்கும். மாணவர்கள் சுயமாகக் கற்று உச்சப் புள்ளி பெற உதவும். வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5384)

## மிளகாய்த்தூள்

இது யாழ்ப்பாண முறைப்படி தரமான மிளகாய் மற்றும் சரக்கு வகைகளைக் கொண்டு கைதேர்ந்த தொழிலாளர்களினால் சுகாதார முறைப்படி வறுத்து அரைக்கப்பட்டது. உங்கள் தேவைக்கேற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். (இ-3596)

## வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசங்கரி, ராஜேஸ், ராஜேந்திர குமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (22848)

## தேவை

கூரைத் தகடு, கடைக்குரிய நிலை, கதவு மற்றும் உருக்கு அல்லது மரத் தளபாடங்கள் தேவை. சோ. விக்னேஸ்வரன் இல. 17, ஆடியபாதம் வீதி, கல்வியன்காடு. (22918)

## பிறின்ரிங்

பிளேன் பில் புத்தகங்கள், வியாபார நிலையங்களுக்குத் தேவையான கலண்டர்கள் விலாசம் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம். (22883)

## தரன் ஸ்ரூடியோ

குறைந்த சலார், குறித்த நேரம் தரன் ஸ்ரூடியோ. தீபாவளித் தினத்தை முன்னிட்டு 09-10-92 – 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகளுக்கு இல. 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (22820)

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature, ஆங்கிலத்தில் பேசப் பயிற்றுவிக்கப்படுகிறது. V. N. Kandasamy, A. I. B. [Part I] [London], Inter [London] 87, திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில். [5386]

## தவறிவிட்டது

இராசநாயகம் நீற்ரா என்பவருடைய அடையாள அட்டை [508432763V] பிரதான வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் சிறிய பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 41/12, மத்தியூஸ் லேன் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [5395]

# நான்காவது பிறந்த நாள் வாழ்த்து

## செல்வன் பிரம்மஸ்ரீ அ. துர்க்காதர்ஷன்

யாழ்ப்பாணம் உரப்புலம் ஆனைக்கோட்டை ஸ்ரீதுர்க்காபுரியினைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ந. அகிலேஸ்வர சர்மா – புஷ்பகலா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் அ. துர்க்காதர்ஷன் தனது நான்காவது பிறந்த நாளை இன்று 17-10 1992 தாய் தந்தையருடன் மொரீசியஸ் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை ஆனைக்கோட்டை அம்மம்மா, தாத்தா, மதிமாமா, சிலாச்சித்தி, கொக்குவில் அப்பம்மா, அத்தை, மாமா, வைதேகி, மந்தாகினி, சேதாமச்சான், ஸ்ரீச்சித்தப்பா, மொரீசியஸ் பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள், பிரான்ஸ் சேகர் மாமா, நந்தினி மாமி, திருநெல்வேலி பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள், நீராவியடி பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள் மற்றும் பூட்டிமார், பூட்டன்மார், தாத்தாமார், பாட்டிமார், அத்தியடி பெரியப்பா, பெரியம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், மாமா, மாமிமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். [5390]

# பற் சிகிச்சை நிலையம்

(கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்)

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

பா நேரம்: தினசரி 4 பி. ப.—6 பி. ப. வரை
ஞாயிறு காலை 10—2 மணி வரை

[5392]

# வெளிவாரிப் பட்டப் படிப்புகள்
## கல்வியாண்டு 93/94

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிவாரிப் பட்டப் பாட நெறிகளான:

★ கலைமாணி (B. A.)
★ விஞ்ஞான மாணி (B.Sc.) [புள்ளிவிபரவியல்]
★ வணிகமாணி (B. Com.)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியடைந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: பேராதனைப் பல்கலைக்கழகத்தால் இதுவரை விண்ணப்பங்கள் கோரப்படவில்லை என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

[சி-8585]

# இலையான் பெருக்கத்தால் நோய்கள் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஒக். 17

மழைகாலம் தொடங்கி விட்டதை அடுத்து, எங்கும் இலையான் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் ஹோட்டல்கள் கடைகள் எங்கு பார்த்தாலும் இலையான் மயமாகவே இருக்கிறது.

குறிப்பாக யாழ். ஆஸ்பத்திரியில் இலையான் தொல்லை மிகவும் மோசமாகவுள்ளது.

இலையான் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், தொற்று நோய்களும் தீவிரமாகப் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இதனால் தனிநபர் சுகாதாரம் பேணுதல், திறந்தபடி விற்பனையாகும் பொருள்களை வாங்காமல் விடுவது மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தொற்றுநோய்களின் ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளலாம்.

இதேவேளை யாழ். மாநகர சபையினர் மற்றும் சுகாதாரப் பிரிவினர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தொற்றுநோய்கள் பரவுவதை ஓரளவு தடுக்க முடியும் என்று நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-162)

# தராசு விற்பனை

கீழே தரப்பட்டுள்ள புதிய தராசுகளும், படிகளும் விற்பனைக்கு உண்டு.

"UNION" Platform Weighing Scale — 250kg
'ISHIDA' Table Balance — 12kg. Made in Japan
SALTER' Hanging Balance — 100kg.
Pocket Balance — 50kg Made in Germany
Beam Balance — 1kg, 2kg, 5kg and 10kg.

**Limited Stock Available**
**Union Pumps also Available**

சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி
லிமிட்டெட்,
206, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[இ-3598]

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

★ கலை முதற் தேர்வு; (G. A. Q.)
வணிக முதற் தேர்வு (First in Com.)
★ பொதுக் கலைத் தேர்வு; (B. A. Part - I)
வணிகமாணித் தேர்வு (B. Com. Part - I)

ஆகிய கற்கை நெறிகள் தொடர்பான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல்: எஸ். வரதராஜன் B. A. [Hons]

**ஆரம்பம்: 18-10-1992 ஞாயிறு**

★ G. A. Q.; Ist. in Com. — ஞாயிறு 4-15 p.m.
★ B. A. Part - I; B. Com. Part - I — ஞாயிறு 10-00 a.m.

முக்கிய குறிப்பு:

1. ஆரம்பத்திலிருந்து முழுப்பாடத் திட்டமும் கற்பிக்கப்படும்.
2. ஒவ்வொரு பாட அலகும் முடிவடைந்தவுடன் அது தொடர்பான வினா-விடைகளும் கற்பிக்கப்படும்.
3. மாணவர்களின் வசதிக்கேற்ப நேர ஒழுங்குகள் தீர்மானிக்கப்படுமாதலால் முதல் வகுப்பிற்கு அனைவரும் சமுகமளிக்கவும்.
4. விரிவுரைகள் ஆரம்பமாகிய தினத்திற்குப் பின்னர் புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

# பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
**(BECON)**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[இ 3577]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதை குழியை நாடி

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே உகந்தது. உரிய அரசியல் தீர்வைப் பேச்சுவார்த்தை மூலம் விரைவில் காண வேண்டும்

இவ்வாறு கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகாரத் துணை அமைச்சர் திரு. மார்க் லெனாக்ஸ் பொய்ட் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் உகந்தது, உரியது என்பது உலகத்தில் உள்ள எல்லோருக்கும் புரிகிறது. அரசியலில் அகரம் தெரிந்தவர்களுக்குக் கூட இந்த யதார்த்தம் புரிகிறது. ஆனால் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு, குறிப்பாக அரச வண்டிலை ஓட்டும் சாரதிகளுக்குப் புரியவில்லை.

1990 ஜூன் மாதத்தில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய போது இராணுவத் தீர்வு பயனளிக்காது, வெற்றி தராது என்பதை அரசாங்கத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளாதிருந்தது சற்றுப் பரவாயில்லை. நிலைமையைப் பகுத்தாராய்ந்து, தீர்க்கதரிசனமாக முன்னாடியே அறிந்து கொள்ளும் திறமை அவர்களுக்கு இல்லை என்பது அதன் அர்த்தம்.

ஆனால் யுத்தம் தொடங்கி இருபத்தேழு மாதங்களாகியும் இராணுவ நடவடிக்கைகள் — இராணுவத் தீர்வு — வெற்றி தரக்கூடியதல்ல என்பதனை இன்னும் மனக்கண்ணில் பதிக்க முடியவில்லை என்றால் அது அவர்களது ஆறாவது அறிவில் ஏதோ பலவீனம் இருப்பதாக அர்த்தம்.

ஆறாவது அறிவு முழுமையாக, கூர்மையாக இருக்கிறதென்றால் அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்களாக, புரிந்தும் புரியாதவர்களாகச் செயற்படுகிறார்கள், வம்புத்தனம் செய்கிறார்கள் என்று அர்த்தம். தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் இந்த ரகத்தினரே.

தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் மாண்டு மடிந்து, நாடு சீரழிவதற்கு வழி செய்கிறார்கள். சரியாகச் சொல்வதாயின் இலங்கை என்னும் நாட்டை வெட்டிப் புதைப்பதற்குத் தாமே குழி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே அரசியல் தீர்வு என்ற நேர்வழி, சுலப வழி இருக்க, இராணுவத் தீர்வு என்ற மேடு பள்ளம் நிறைந்த கரடு முரடான வழியால், பின் வழியால் வண்டியைச் செலுத்துகிறார்கள். அந்தப் புதைகுழியை நாடி!

உண்மையாக உறங்குபவனை துயில் எழுப்பலாம். உறங்குவதுபோல் பாசாங்கு செய்பவனை எப்படித் தட்டினாலும் அவன் எழுந்திருக்க மாட்டான். யார் வந்து உலுப்பினாலும் உறங்குவது போலவே கண்ணை மூடிக் கொண்டிருப்பான்.

ஆகையால் பிரிட்டிஷ் அமைச்சரென்ன, வேறு எந்த உலகத் தலைவரென்ன கொழும்பு அரசுத் தலைவர்களுக்கு அரசியல் தீர்வு குறித்து வற்புறுத்தி அவர்கள் அந்த வழிக்குத் திரும்பப் போவதில்லை.

ஏதோ, வந்த இடத்தில், சந்தித்த இடத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டுப் போவோமே என்ற நினைவுடன் வெளிநாட்டுத் தலைவர்கள் கூறும் புத்திமதிகள் பயன் தரப் போவதில்லை. கொழும்பு அரசு திக்குமுக்காடும் அளவுக்குத் தங்களுக்குச் சாத்தியமான பலவித அழுத்தங்களையும், நெருக்குதலையும் போடும் அளவுக்கு வெளிநாடுகள் முன் வந்தால் தான் கொழும்புத் தலைவர்கள் திருந்துவார்கள்.

---

சிங்கள - முஸ்லிம் கிராமங்களுக்கு

# பாதுகாப்பு வழங்குவதில் படையினருக்கு பிரச்சினை

கொழும்பு, அக். 17

வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள — முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பது படையினருக்குத் தொடர்ந்து பெரும் கஷ்டங்களை ஏற்படுத்தி வருகிறது.

பொலன்னறுவை வடக்கு எல்லைப்புறக் கிராமங்களில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜேர்மன் வானொலிக்கு அளித்த பேட்டியில் பிரபல விமர்சகரான ஜெஹான் ராஜகருணாநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிராமவாசிகளுக்கு பயிற்சி அளித்து ஆயுதம் வழங்கும் திட்டமும் வெற்றி அளிக்கவில்லை என்று அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மட்டு. மாநகரசபை தேர்தல் நடக்குமாம்

கொழும்பு, அக். 17

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலை அடுத்த ஆண்டில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் — இதில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் கொழும்பில் செய்தி வெளியாகியுள்ளது. (ஒ-எ)

## 20 ஆயிரம் அகதிகளை வவுனியாவில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, அக். 17

தமிழ்நாட்டிலிருந்து திரும்பும் அகதிகளில் 20 ஆயிரம் பேரை வவுனியாவில் தற்காலிகமாக குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் புனர்வாழ்வுப் பிரிவு இவர்களை வவுனியாவில் குடியமர்த்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த அகதிகளே வவுனியாவில் குடியமர்த்தப்படுவதாக பாதுகாப்பு பிரிவு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 10)

## கப்பல் தபாற் சேவையால் வாய்ப்புகள் பறிபோகின்றன

யாழ்ப்பாணம், அக். 17

கனடாவில் நேற்று ஆரம்பமான சுற்றாடல் அபிவிருத்திக்கான கல்வி மற்றும் தொடர்பியல் சம்பந்தமான உலகக் காங்கிரஸ் மாநாட்டில், தென்கிழக்காசிய சுற்றாடல் அபிவிருத்தி அமைப்பின் தலைவர் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று.

அவர் கனடா செல்வதற்கான பிரயாணப்பத்திரங்கள் 'குமாரி'யில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவை வரவில்லை. அதனால் அவர் தமது உத்தேச பயணத்தைக் கடைசி நேரத்தில் கைவிட நேர்ந்துள்ளது.

இவ்வருடம் ஜூன் மாதம் பிரேசிலில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் நடைபெற்ற உலகச் சூழல் உச்சி மாநாட்டில் சர்வதேசப் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கு கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் அழைக்கப்பட்டிருந்தார். அப்போதும் பிரயாணப் பத்திரங்கள் உரிய நேரத்தில் யாழ்ப்பாணம் வந்து சேராததால் அவர் அந்த மாநாட்டுக்கும் சமூகமளிக்கமுடியவில்லை. சம்பந்தப்பட்ட பிரயாணப் பத்திரங்கள் மாநாடு முடிவுற்று சுமார் ஒரு மாதத்தின் பின்னரே இங்கு வந்து சேர்ந்தன.

யாழ்ப்பாணத்துக்கு வெளிமாவட்ட மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் கப்பல் தபாற் சேவை காரணமாக உரிய நேரத்தில் வந்து சேராததால் இவ்வாறு வரும் கிடைத்தற்கரிய வாய்ப்புகளைப் பெற்றும் பயன்பெற முடியாத— கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை உள்ளது. (அ)

## எகிப்தின் புராதன சின்னம் கர்ணா கோவிலும் சேதம்

கெய்ரோ, அக். 17

எகிப்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிலநடுக்கத்தின்போது புராதனச் சின்னமான கர்ணா கோவிலின் ஒரு பகுதி சேதம் அடைந்துவிட்டதாக எகிப்திய அரச யூனெஸ்கோ நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது.

பாரோஸ் மன்னர்கள் காலத்துப் பழமை வாய்ந்த இக்கோவில் தலைநகர் கெய்ரோவிலிருந்து தெற்கே 500 கிலோமீட்டர் தொலைவில் நைல் நதிக்கரையில் அமைந்துள்ளது. (இ-10)

## வள்ளுவர் ஆண்டுடன் தமிழ்த் திகதிகளுக்கு முதன்மைகொடுத்து பாவிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக் 17

தமிழ் மக்கள் அனைவரும் தமது அன்றாட வாழ்வில் திருவள்ளுவர் ஆண்டையும், தமிழ் மாதங்கள் திகதிகளையும் முதன்மை கொடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு உரும்பராய் திருவள்ளுவர் மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருவள்ளுவர் ஆண்டையும், தமிழ்த் திகதிகளையும் மக்கள் முதலிடம் கொடுத்து அன்றாடம் பாவிக்கும் பொருட்டு - புழக்கத்திற்கு கொண்டு வர உதவும் முகமாக - தமிழீழத்தில் அச்சிடப்படும் திகதி அட்டவணைகளில் தமிழ்த் திகதிகளுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

1993 ஜனவரிக்குப் பதிலாக திருவள்ளுவர் ஆண்டு 2024 தைத் திருநாளுடன் ஆரம்பித்து ஓராண்டுக்கான திகதி அட்டவணைகளை (கலண்டர்களை) அச்சிடுமாறு திகதி அட்டவணை வெளியீட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கழகங்கள், மன்றங்கள், அமைப்புகளிடம் திருவள்ளுவர் மன்றம் கேட்டுள்ளது.

இதே வேளை, திருக்குறளைப் பரப்பும் பொருட்டு இலவச திருக்குறள் வகுப்புகளை நடத்துவதற்கும் மன்றம் தீர்மானித்துள்ளது.

மாதாந்தம் முழுநிலா நாட்களில் அறிஞர்களைக் கொண்டு திருவள்ளுவர், திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி உரைகளை ஆற்றுவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## கர்ப்பவதிகளுக்கு போசாக்குணவு

உடுவில், அக். 17

மானிப்பாய், கட்டுடையில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் கர்ப்பவதி தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் போசாக்குணவு மற்றும் பால்மா வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மானிப்பாய், கட்டுடையிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் இந்த உதவிகளைச் செய்து வருகின்றனர். (ஒ-152)

## மாத்தளை மாநகரசபை உறுப்பினர் கைதானார்

### மேயரை பயமுறுத்தினாராம்

கொழும்பு, அக். 17

மாத்தளை மாநகர மேயர் ரஞ்சித் அலுவிஹாரேயைக் கத்தியால் குத்தப்போவதாக பயமுறுத்தியது தொடர்பாக அந்த மாநகரசபையின் உறுப்பினர் முகமது ரஸ்மர் ஹூசேனைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதாவதைத் தவிர்த்து வந்த அந்த உறுப்பினர் இம் மாதம் 7 ஆம் திகதி மாநகர சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு புறப்படுகையில் கைது செய்யப்பட்டார்.

மேயரும் சந்தேக நபரான சபை உறுப்பினரும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்மீது காசோலை மோசடி பற்றிய முறைப்பாடுகளும் வந்துள்ளதாக பொலிஸார் கூறினார்கள்.

# மக்கள் வங்கி அலுவலகம் முன் அடையாள மறியல் போராட்டம்

### கூட்டுறவுச் சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், அக். 17

தமது கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் அலுவலகத்துக்கு முன்னால் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை அடையாள மறியல் போராட்டம் நடத்துவது என்று யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை தீர்மானித்துள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக 16-10 92க்கு முன்னர் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சாதகமான முடிவை எடுத்து மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி உள்ளது.

அக்கடிதத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

★ யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தமது வங்கி நடவடிக்கைகளை மக்கள் வங்கிக் கிளையிலேயே வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. தங்களுக்குத் தேவைப்படும் மேலதிகப் பற்று, குறுகிய காலக்கடன், நீண்ட காலக்கடன் ஆகியவற்றை மக்கள் வங்கியிலேயே பெற்று வருகின்றன. அப்படி இருந்தும் தற்போது சங்கங்களின் நாளாந்த விற்பனைப் பணம் வைப்பிலிடப்படுவது ஏற்கப்படாதிருப்பதுடன், கடன்களுக்கு சங்கங்களிடம் இருந்து வட்டியும் அறவிடுவது சங்கங்களின் செயற்பாட்டைப் பெரிதும் பாதிக்கிறது.

★ பணத்தை வங்கியில் இடுவதை ஏற்காது இருப்பது வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

★ எனவே பணத்தை வைப்பில் இடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் பணத்தை வைப்பில் ஏற்க மறுத்த காலப்பகுதிக்கான வட்டி கழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இன்று காலை முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், அக். 17

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையினர் நடத்தவிருக்கும் அடையாள மறியல் போராட்டம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவு எடுப்பதற்காக இன்று கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மா. கூ. சபை மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள சந்திப்பில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளரும் கலந்து கொள்கிறார்.

எனவே இந்தக் கலந்துரையாடலில் ப.நோ. கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் அவசியம் பங்குபற்றும்படி மா. கூ. சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனஞ்சீனியை பெருமளவில் தயாரிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், அக். 17

சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், வழமையை விட அதிகமான அளவு பனஞ்சீனியையும், பனம் வெல்லத்தையும் உற்பத்தி செய்யுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பிரிவினர் இது சம்பந்தமாக விடுத்துள்ள வேண்டுகோளில் தனிநபர் பதனீர் உற்பத்தியாளர்களையும், பனை அபிவிருத்தி சபையினரையும் அதிகளவு பனஞ்சீனியை உற்பத்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்றைய போராட்ட காலத்தில் மக்கள் பல வழிகளிலும் பொருளாதார பளுவைச் சுமந்து நிற்கின்றனர். இவ்வேளையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள போக்குவரத்துத் தடை காரணமாக சீனிக்குத் தட்டுப்பாடு உருவாகி உள்ளது —

வடமாகாணத்தில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்தி சபையினர் மற்றும் தனிநபர் பதனீர் உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமுள்ள பனம் பாணியை உடனடியாகச் சீனியாகவோ வெல்லமாகவோ உற்பத்தி செய்து மக்களின் அத்தியாவசிய சீனித் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம் — என்று பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியப் பிரிவினர் விடுத்த அறிக்கையில் கோரியுள்ளனர். [ஈ]

# பட்ஜெட் நவ. 6 இல்

1993ஆம் ஆண்டுக்கான புதிய உத்தேச வரவு செலவுத் திட்டத்தை பிரதமரும், நிதி அமைச்சருமான திரு டி. பி. விஜேதுங்க எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணியளவில் சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கலை விழா

யாழ்ப்பாணம், அக். 17

நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின் (மங்கையர்க்கரசி) நிதி உதவிக்காக, பழைய மாணவர்களால் பாடசாலை மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கலைவிழா ஒன்று நடத்தப்படவுள்ளது.

திரு. பொன் சுந்தரலிங்கத்தின் புரட்சி கானங்கள், இலங்கை வேந்தன் பங்குபற்றும் சுதாளி பரத நாட்டியம், புலவர் முத்துராசரெத்தினத்தின் பண்டார வன்னியன் நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன

# இலவச உலர் உணவு:

# முழு அளவில விநியோகம் மீண்டும் நடைமுறைக்கு!

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குமாறு அரசாங்கம் அறிவித்ததையடுத்து, அக்டோபர் மாதத்துக்கான கடைசிவார இலவச உலர் உணவு முழு அளவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரையை சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு விடுத்துள்ளது.

நிவாரணத்தில் அடங்கும் உணவுப் பொருள்கள், அவற்றின் விலை விபரங்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரிசி, சீனி, மா, ரின் மீன், அங்கர் பால்மா என்பன வழங்கப்படவுள்ளன. [ஒ-5]

# ஊழல் குற்றச்சாட்டு:

# விசாரணைக் குழுவுக்கு எதிராக கருணாநிதி மனு

சென்னை, அக். 17

தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை தமிழக அரசு நியமித்திருப்பதை ஆட்சேபித்து தி. மு. க தலைவர் மு. கருணாநிதி நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நீதியரசர் திரு. சிவசுப்பிரமணியம், தம் மீது ஏற்கனவே பகைமை கொண்டிருக்கிறார் என்று திரு. கருணாநிதி தமது ரிட் மனுவில் கூறியிருக்கிறார்.

ஆகவே அவர் விசாரணை நடத்த தகுதியற்றவர் என திரு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

இந்த ரிட் மனு எதிர்வரும் திங்களன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்புரத்தினம் சோதிநாதரத்தினம்

திருமதி தம்புரத்தினம் சோதிநாதரத்தினம் காலமானார். அன்னார் மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தயாபரன் (ஜேர்மனி), தயாநிதி விஜயரத்தினம் (கிளிநொச்சி), தயாகுணம் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 17-10-1992 பகல் 12-00 மணிக்கு ஊரெழு, கஸ்தூரி வீதியில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கணை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
தயாகுணம்.

கஸ்தூரி வீதி,
ஊரெழு.

[22925]

## திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம் 16-10-1992ல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், நளாயினி (கனடா), தயானன் (சுவிஸ்), நித்தியானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பூணநாயகம், பத்மநாதன் (கனடா), இராசேந்திரம், நாகேந்திரம், காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகுமாரன் (கனடா), சகுந்தலாதேவி (ஜேர்மனி), சத்தியபாமா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கதிர், கார்த்திகா, நிருபன், நிதர்சனா, பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலி வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் 17-10-1992 (இன்று) 2 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. யோகநாதன்
(மருமகன்)

'லட்சுமி வாசா'
அச்சுவேலி வடக்கு.

[22932]

## முருகேசு பொன்னம்பலம்

(நயினாதீவு)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு பொன்னம்பலம் நேற்று 16-10-92 இல் காலமாகி விட்டார்.

இவர் காலம்சென்ற திரு. திருமதி முருகேசுவின் மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தராசன், சண்முகதாஸன் (குகன்), கண்ணதாசன், சுகந்தினி, வதனி, தர்சினி, வீரகேசன் ஆகியோரின் தந்தையாரும், காலம்சென்ற வீரகத்திப்பிள்ளை தங்கம்மாவின் மருமகனும், காலம்சென்ற சுப்பிரமணியம், காலம்சென்ற மார்க்கண்டு, தங்கம்மா, காலம்சென்ற செல்லமுத்து, சிவக்கொழுந்து தாமோதரம்பிள்ளை, கமலவதி ஆகியோரின் சகோதரனும், நடராசா, பூமணி, காலஞ்சென்ற மயில்வாகனம், கமலாம்பிகை, கனகரெத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

423, கண்டி றோட்,
A V றோட் பாலலவளவு,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
த. சிவயோகலிங்கம்
(மருமகன் ஆசிரியர்)

[22933]

### பிரிட்டனின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விகளை முன்பு இருந்த நிலைக்கு அதிகரிக்க பிரிட்டன் அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

தீவிரவாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போரிடுவதற்கு, முன்னர் உதவியது போன்று ஸ்ரீலங்கா அரசுக்கு பிரிட்டன் மீண்டும் உதவும் — என்றார்.

இதேவேளை இலங்கையுடன் இருதரப்பு உறவுகளையும் சகஜ நிலைக்குக்கொண்டுவர பிரிட்டிஷ் அரசு எடுத்துள்ள முடிவை ஜனாதிபதி பிரேமதாஸா வரவேற்றுள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாண எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர், பிரிட்டிஷ் துணை அமைச்சர் திரு. மார்க் பொய்ட்டுக்கு விளக்கியதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

தமிழ் நாட்டில் இருந்து அகதிகள் தாயகம் திரும்புவது, மற்றும் அவர்களுக்காக எடுக்கப்பட்டு வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றியும் அவருக்கு எடுத்துக்கூறப் பட்டதாம். [அ-எ-5]

### தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் மறுத்தார்.

"டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியை அ. தி. மு. க. அமைச்சர் எவரும் சந்திக்கவேயில்லை; சந்திக்கவேண்டிய தேவையும் இல்லை" — என்று அவர் கூறினார். (ஒ-எ)

### சூனியப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை நகரப் பகுதியில் திருக்கடலூர், லிங்கநகர் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப் பட்டுள்ளனர்.

புல்மோட்டை, சலப்பையாறு பகுதிகளில் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் பிரதேசமான புல்மோட்டை சாகரபுர என்று பெயர் மாற்றப்பட்டு, அங்கு "சாகரபுர மீனவர் குடியேற்றத் திட்டம்" ஒன்று சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. (ஒ-5)

# தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 17

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில், நாளை ஞாயிற்றுக்கிழமை சங்கானை, காரைநகர் மக்களிடம் இருந்து மீட்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

சங்கானை உ. அ. அ பிரிவில் வாழும் மக்கள் தமது மீட்பு நிதியை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் காலை 9 30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை வரையும் —

காரைநகர் மக்கள் தமது மீட்பு நிதியை பண்ணாகம் வழக்கம்பரை மெய்கண்டான் பாடசாலையில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் செலுத்தலாம்.

**சண்டிலிப்பாயில் இன்று**

இதேசமயம், சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இன்று (சனிக்கிழமை) பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை, மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மீட்பு நிதியைச் செலுத்தலாம்.

உடுவில் உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் இன்று காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் வைத்து மீட்பு நிதி சேகரிக்கப்படும். (ஒ)

# ராஜீவ் மகள் பிரியங்கா பி. ஏ. பரீட்சையில் தோல்வி

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா தத்துவ இயல் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தி அடையத் தவறிவிட்டார்.

டில்லியில் உள்ள ஜேசஸ் மேரி பெண்கள் கல்லூரியில் பிரியங்கா தத்துவ இயலை பிரதான பாடமாகக் கொண்டு பி ஏ படித்து வந்தார்.

அண்மையில் நடந்த இறுதி ஆண்டுப் பரீட்சையில் தேசிய மொழிப்பாடமான இந்தியில் அவர் சித்திபெறவில்லை.

எனினும் டில்லி பல்கலைக் கழகம் அவரை தொடர்ந்து எம் ஏ. பட்டப்படிப்பு படிக்க அனுமதி வழங்கியுள்ளது.

இன்னும் ஆறு மாத காலத்தில் இந்தி பாடத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே பிரியங்காவுக்கு பல்கலைக் கழகம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது [இ-5]

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

தில்லையம்பலம் நிறுவனம்

மணையியற் கண்காட்சி

இடம்: தில்லையம்பலம் நிறுவன மண்டபம் (பழைய பூங்கா வீதி)

காலம்: 21—10—1992 — 23—10—1992 ஆம் திகதி வரை.

நேரம்: காலை 9-00 மணி — மாலை 6-00 மணி

அனைவரையும் அழைக்கிறோம்.

- அதிபர்.

[சி-3486]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 392/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org